අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# கத்தோலிக்க திருமறை

## வினாத்தாள் I & II



The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்

# கல்வி அமைச்சு

| 14 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

கத்தோலிக்கதிருமறை - I, II | நேரம் : 3 மணித்தியாலம்

### கத்தோலிக்க திருமறை- I

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

### பகுதி 1

1. புதிய ஏற்பாட்டில் முதன்முதலாக எழுதப்பட்ட நற்செய்தி
   (1)மாற்கு (2)யோவான் (3)மத்தேயு (4)லூக்கா

2. '"தெயோபில் "என்ற பெயரின் அர்த்தம்
   (1)கடவுளின் தூதர் (2)கடவுள் நம்மோடு
   (3)ஆண்டவரின் நண்பன் (4) ஆண்டவராகிய கடவுள்

3. எரிந்தும் தீய்ந்து போகாத முட்செடி அடையாளப்படுத்துவது
   (1)இறை ஏவுதல் (2)இறை பிரசன்னம்
   (3)இறை இரக்கம் (4)இறை ஆட்சி

4. ஞான இலக்கியத்தில் அடங்கும் இரண்டு நூல்கள்
   (1)யோசுவா, யோனா (2)எஸ்ரா, நெகேமியா
   (3)தோபித்து, யூதித்து (4)யோபு, நீதிமொழிகள்

5. திருத்தூதரான தோமா தன் இறை நம்பிக்கையை வெளிப்படுத்திக் கூறிய வார்த்தை
   (1) "என் ஆண்டவரே என் தேவனே" (2)"ஆண்டவரே என் மீட்பரே"
   (3) "நீர் மெசியா" (4)"வாழும் கடவுளின் மகன்"

6. யூதர்கள் தம் தானிய அறுவடையின் முதற் பயனை ஒப்புக் கொடுப்பது ------------------------- -------------.------------------------------------------விழாவில் ஆகும்.
   (1)பாஸ்கா (2)கூடார (3)ஆலய அர்ப்பண (4) பெந்தக்கோஸ்து

7. பவுல் தொடர்பான கூற்றுக்களில் பொருத்தமானது
   (1)பெஞ்சமின் கோத்திரத்தை சேர்ந்தவர்
   (2)தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டவர்
   (3)தர்சு நகரில் பிறந்தவர்
   (4) ஆசிரியராகிய கமாலியேலிடம் கல்வி கற்றவர்

8. புனித பவுலின் அறிவுரைகளைக் கொண்டு வேறு நபர்களால் எழுதப்பட்ட திருமுகங்கள்
(1)கலாத்தியர், பிலிப்பியர் (2)பிலிப்பியர், பிலமோன்
(3)எபேசியர், கொலோசையர் (4)உரோமையர், கலாத்தியர்

9. கொஸ்மஸ் இன்டிக்கோ பிளாஸ்ரர் என்பவர்எழுதிய நூல்
(1) தேவவேத புராணம் (2)கிறிஸ்தவ சபைகளின் விபரணம்
(3)வியாகுலப் பிரசங்கம் (4)இறைவனின் நடுநிலையாளர்

10. இயேசுஅப்பங்களைக் பலுகச் செய்த அருங்குறியை குறிப்பிடும் நற்செய்தி நூல்கள்
(1)மத்தேயு, மாற்கு (2) மாற்கு, லூக்கா
(3) லூக்கா, யோவான் (4()நான்கு நற்செய்தி நூல்களும்

11. எரிபலிகள் எத்தனை வகைப்படும்
(1)4 (2)3 (3)5 (4)2

12. ஐந்தாவது கட்டளைக்கு எதிரான செயலாக அமைவது
(1) தரக்குறைவான பேச்சுக்களை அடிக்கடி பேசுதல்
(2) பரீட்சைகளில் பார்த்து எழுதியும் மாற்றம் செய்தும் சழத்தி பெறல்
(3)மனிதனுக்கும் சூழலுக்கும் ஒவ்வாத வியாபாரங்களில் ஈடுபடுதல்
(4) பொய் வதந்திகளால் ஒருவரின் நற்பெயரைக் கெடுத்தல்

13. முதவாம் கட்டளை எப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டது
(1) நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு (2)ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிவு
(3)உண்மை,நீதி, சமத்துவம் (4)நம்பிக்கை, ஏழ்மை,

14. உண்மைபின்வரும் விடயங்களில் புனித அன்னைத் திரேசாவுடன் தொடர்புடைய தெரிவுகள்
A: "அன்பின் கன்னியர் சபையை ஆரம்பித்தார்"
B: 1995ம் ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.
C: "மரியாயின் மாசற்ற இருதய சேனை" என்ற சபையை ஆரம்பித்தார்.
D: 2003ம் ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.
(1)AB (2)BC (3)CD (4)AD

15. திருவழிபாட்டின் பிரதான மூன்று பகுதிகளில் பொருத்தமற்றது
(1) திருப்பலி (2)திருச்செபமாலை
(3)அருளடையாளங்கள் (4)திருப்புகழ்மாலை

16. இயேசுவால் செபிப்பதற்கு ஜெத்சமனிக்கு அழைத்துச் செல்லப்பட்ட மூவர்
(1)பேதுரு, தோமா, யோவான் (2) யோவான், பேதுரு, மத்தேயு
(3) பேதுரு, யாக்கோபு,பிலிப்பு (4) பேதுரு, யாக்கோபு, யோவான்

17. திருப்பலியின் பிரதான மன்றாட்டாக அமைவது
(1) நற்கருணை மன்றாட்டு (2) காணிக்கை மீது மன்றாட்டு
(3) சபை மன்றாட்டு (4) விசுவாசிகளின் மன்றாட்டு

18. திருப்பலியில் "அல்லேலூயா","குளோறியா" பாடப்படுவது தவிர்க்கப்படும் காலம்
(1)பொதுக்காலம் (2) தவக்காலம்
(3) திருவருகைக்காலம் (4) பாஸ்கா காலம்

19. “பொய்முகம் அணிந்து நாடகம் நடித்தல்” இக்கூற்றோடு தொடர்புடையவர்கள்
(1) ஆதாம், ஏவாள் (2) ஏரோது, ஏரோதியாள்
(3) அனனியா, சப்பிரா (4) அக்கில்லா, பிரிசில்லா“

20. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில்................................”
(1)கடவுளின் மக்கள் எனப்படுவர் (2)அவர்கள் கடவுளைக் காண்பர்
(3)விண்ணரசு அவர்களுக்குரியது (4)அவர்கள் நிறைவு பெறுவர்

21. யூதர்களும் கிறிஸ்தவர்களும் பயன்படுத்தும் எபிரேயப் பிரதி
(1)மசோரோடிக் (2) செப்துவாஜிக் (3) தார்கூம் (4)வுல்கத்தா

22. கிரேக்க மொழியாகிய “ப்றோபரஸ்” என்பதன் பொருள்
(1)இறைவனுக்காகப் பேசுபவர் (2) பரவச நிலையில் பேசுபவர்
(3) இறைவாக்குரைப்பவர் (4) ஒருவருக்காகப் பேசுபவர்“

23. சபாத்” நாளின் முக்கியத்துவத்தைக் காட்டும் கதை மரபு
(1) குரு மரபு (2) யாவே மரபு (3) எலோகிம் மரபு (4)இணைச்சட்டம்

24. கூற்று: நோவாவின் குடும்பத்தினர்பெரியதொரு அழிவிலிருந்து மீட்கப்பட்டனர்.
காரணம்: ஏனெனில் அவரது பரம்பரையில் அவரே குற்றமற்றவர்.
(1)காரணம் சரி கூற்று பிழை (2) கூற்று சரி காரணம் பிழை
(3) கூற்றும் காரணமும் சரி (4) கூற்றும் காரணமும் பிழை

25. இஸ்ரயேலரின் பிறக்கும் ஆண்குழந்தைகளைக் கொல்வதற்கு பாரவோன் நியமித்த தாதியர் இனம்
(1)எகிப்தியர் (2) எபிரேயர் (3)கிரேக்கர் (4)பாரசீகர்

26. திருமுழுக்கு யோவானின் பிறப்பினால் எடுத்துக்காட்டப்படுவதுசெக்கரியாவின்
(1)குருத்துவப் பணி (2) எலிசபேத்தின் மனமகிழ்வு
(3)திருமுழுக்கு யோவானின் சிறப்பு (4)இறைவனால் ஆகாதது ஒன்றுமில்லை

27. இயேசு பாலை நிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதன் நோக்கம்
(1) மறைவான வாழ்வில் ஈடுபட
(1) மறைப்பணிக்குத் தம்மை ஆயத்தமட் செய்ய
(3) அலகையின் சோதனையை வெல்ல
(4) தமது வல்லமையை வெளிப்படுத்த

28. “வாழ்வென்பது கிறிஸ்துவோடு இருப்பதாகும். கிறிஸ்து எங்கு இருக்கிறாரோ அங்கு இறையாட்சியும் இருக்கின்றன” எனக் கூறியவர்
(1)புனித அம்புறோஸ் (2) புனித அகுஸ்தீன்
(3) புனித ஆசீர்வாதப்பர் (4) புனித அக்வைனஸ்

பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 29ம் 30ம் வினாக்களுக்கு விடை தருக

A: திருமுழுக்குப் பெற்றிருத்தல்.

B: புகுமுக அருளரடையாளங்களைப் பெற்றிருத்தல்.

C: குறிப்பிட்ட வயது (14 வயது) நிறைவடைந்திருத்தல்

D: 16வயதை பூர்த்தி செய்தவராக இருத்தல்.

28. உறுதிபூசுதல் பெறத் தேவையான தகுதிகளாக அமைவன
(1)A,B (2) A,D (3)A,C (4) B,C

29. ஞானப் பெற்றோராவதற்கு இருக்கவேண்டிய தகுதிகள்
(1) B,D (2) B,C (3) A,B (4) A,C

30. துறவற குழுமவாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாக குறிப்பிடத்தக்கவர்கள்
(1)தேப்ஸ் சின்னப்பர், வனத்து அந்தோனியார்
(2)புனித பசில், புனித ஜெறோம்
(3)புனித பக்கோமியா, புனித ஆசீர்வாதப்பர்
(4)புனித அகுஸ்தீனார், புனித அம்புறோசியார்

31. துறவற வாழ்வின் குழும வாழ்வின் ஆரம்ப கர்த்தாக்களாகுறிப்பிடத்தக்கவர்கள்
(1)தேப்ஸ் சின்னப்பர், வனத்து அந்தோனியார்
(2)புனித பசில், புனித ஜெறோம்
(3)புனித பக்கோமியா, புனித ஆசீர்வாதப்பர்
(4)புனித அகுஸ்தீனார், புனித அம்புறோசியார்

32. கத்தோலிக்க திருமணத்தின் நோக்கங்களில் ஒன்று
(1)அன்னியோன்ய அன்பால் முழுமையடைதல்
(2)இருவரும் கத்தோலிக்கராய் இருத்தல்
(3)குடும்பத்தின் ணற்றுமைக்காய் செயற்படுத்தல்
(4)மனிதாபிமானத்தை கட்டியெழுப்ப தேவைப்படுவது

33. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் துணைக்குறிக்கோள்களில் ஒன்று
(1)சிறுவர்களுக்கு கற்றுக் கொடுத்தல்
(2)திருவிவலிய அறிவுப்போட்டியை நடத்துதல்
(3)மாதத்திற்கு ஒருமுறை திருமணித்தியாலம் நடாத்துதல்
(4)மனிதாபிமானத்தை கட்டியெழுப்புதல்

34. எபிரேய பதத்திற்கு சரியான பொருளைத்தரும் சோடிகள்
(1)அபாத்-பாதுகாத்தல் (2)றதா-பராமரிப்பு
(3)ஷாமர்- பயிரிடுதல் (4)அபாத்- ஆளுதல்

35. மனித வாழ்வை பாதுகாத்து கட்டியெழுப்ப தேவைப்படுவது
(1)பொருளாதாரம் (2)கல்வி (3)குடும்பம் (4)சமாதானம்

36. ஒருசந்தி பிடிப்பதன் பிரதான குறிக்கோள்
(1)மனதை ஒருநிலைப்படுத்தல் (2)தருமம் செய்தல்
(3)தியானத்தில் ஈடுபடுதல் (4)தூய்மை பேணுதல்

37. இயேசு சீடர்களுக்கு செபிக்க கற்றுக் கொடுத்தமைகான காரணம்
(1)தமது விருப்பின் பெயரில் (2)சீடர்களின் கீழ்ப்படியாமையால்
(3)சீடர்களின் வேண்டுகோளுக்கு இணங்க (4)சீடர்களை உருவாக்க

38. “புனித கன்னி மரியா கருவாக உருவான போதே சென்ம பாவ தோஷத்திலிருந்து பாதுகாக்கப்பட்டார் “ எனக்கூறியவர்
(1)திருத்தந்தை 6ம் பவுல் (2)திருத்தந்தை 2ம் யோண்பவுல்
(3)திருத்தந்தை 10ம் பத்திநாதர் (4)திருத்தந்தை 9ம் பியூஸ் (பயஸ்)

39. குருக்கள் துறவிகளின் முதற்பணியாக அமைவது
(1)திருப்பலி ஒப்புக்கொடுத்தல் (2)காலை மாலை வீடு தரிசித்தல்
(3)திருப்புகழ் மாலை சொல்லல் (4)திருவருட்சாதனம் வழங்கல்

40. தியானத்தின் மறுசீரமைப்பு தமது எழுத்தாக்கங்களால் பங்களிப்பு செய்தவர்
(1)புனித அன்னை திரேசா (2)புனித அவிலா திரேசா
(3)புனித சின்னத்திரேசா (4)புனித அக்னெஸ்

(1x40=40 புள்ளிகள்)

## பகுதி 2

முதலாம் வினாவுக்கும் மேலும் நான்கு வினாக்களுக்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக

1. (1)வாழ்க்கையின் அர்த்தம் அதன் சிக்கல்கள் தீர்வுகள் பற்றிய கருத்தியலை உள்ளடக்கும் இரண்டு நூல்களை தருக?
   (2)கிறிஸ்துவுக்காக முதல் மறை சாட்சிகளான திருத்தூதர், திருத்தொண்டர் இருவரையும் குறிப்பிடுக?
   (3) திருச்சபையில் கத்தோலிக்கம் என்ற சொல்லின் பண்புகள் இரண்டு தருக
   (4) திருப்பலியில் நினைவு கூரப்படும் விடயங்கள் இரண்டு தருக?
   (5)கிறிஸ்தவ சமாதானத்தை முன்னிட்டு இரண்டாம் வத்திக்கான் சங்கம் வெளியிட்ட விதித்தொகுப்பு இரண்டு தருக?
   (6)எழுத்து வடிவம் பெறாத இறைவாக்கினரின் போதனைகள், செபங்கள் காணப்படும் இரண்டு நூல்களை தருக?
   (7) “ஏவாள் ஆசைக்கு அடிமைப்பட்டு தவறான தீர்மானம் எடுத்தாள்” இதன்மூலம் நமக்கு கிடைக்கும் செய்திகள் இரண்டு தருக?
   (8)மனம் வருந்துதலின் வகைகள் இரண்டு தருக?
   (9)இறையாட்சியை உரிமையாக்கி கொள்ள நாம் செய்யும் இரக்க செயல்களின் வகைகள் இரண்டு தருக?
   (10)ஆழ்நிலை தியானத்தின் படிமுறைகள் இரண்டு தருக?

(2x10=20 புள்ளிகள்)

1. (1)குரு மரபுக்குரிய சம்பவங்கள் இரண்டு தருக?
   (2)ஒத்தமை நற்செய்திகளையும் அவை எழுதப்பட்ட இடங்களையும் குறிப்பிடுக?
   (3)உம்மிடம் தரப்படும் ஒரு செயலை பொறுப்புணர்வோடு செய்ய புனித பவுலிடம் இருந்து கற்றுக்கொள்ளும் முன்மாதிரிகைகள் ஐந்தை குறிப்பிடுக?

(2+3+=10 புள்ளிகள்)

1. (1) புனித அன்னை திரேசாவின் பணியை பெற்றுக்கொண்ட இரண்டு வகையினரை குறிப்பிடுக?
   (2)அருள்பணி மைக்கல் றொட்றிக்கோ அடிகளார் ஏழைகளைநோக்கமாக கொண்டு செய்த திட்டங்கள் மூன்று தருக?
   (3)புனித இரண்டாம் அருளப்பர் சின்னப்பரில் காணப்பட்ட விசேட பண்புகள் ஐந்தினை குறிப்பிடுக?

(2+3+=10 புள்ளிகள்)

1. (1)தொடக்க நூலில் இறைமனித உடன்படிக்கைக்கு எடுத்துகாட்டுக்கள் இரண்டு தருக?
   (2)சமுதாயத்தில் காணப்படும் உடன்படிக்கைகளில் இருந்து திருவிவிலியத்தில் காணப்படும் உடன்படிக்கைகள் வேறுபடும் விதம் மூன்று தருக?
   (3) “இறைவன் மனிதனுக்கு தனது அன்பையும் பாதுகாப்பையும் வெளிப்படுத்த இயற்கையை பயன்படுத்தினார்” இதற்கு விடுதலைப்பயணத்தில் இருந்து ஐந்து விடயங்களை தருக?

(2+3+=10 புள்ளிகள்)

*(1)உணவு இவ்வுல வாழ்விற்கு தேவையானது போல ஆன்மீக வாழ்வுக்கு தேவையான விடயங்கள் இரண்டு தருக?*
*(2) "விண்ணுலகத்தில் இருக்கின்ற எங்கள் தந்தையே"என்னும் விவிலிய சொல்குறிக்கும் விடயங்கள் மூன்றுதருக?*
*(3) "எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல் எங்கள் குற்றங்களையும் மன்னியும் "என்பதை நீர் பின்பற்றிய சந்தர்ப்பங்கள் ஐந்து தருக?*

(2+3+=10 புள்ளிகள்)

*(1)உறுதி மொழியை மீறி இரகசியத்தை வெளிப்படுத்துவதால் ஆபத்தை எதிரநோக்கும் நபர்கள் இருவரை தருக?*
*(2)திருப்பலி ஒப்புக்கொடுப்பதன் நோக்கங்கள் மூன்று குறிப்பிடுக?*
*(3)ஏழாம், பத்தாம் கட்டளைகளுக்கு ஏற்ப நீர் வாழும் சந்தர்ப்பங்கள் ஐந்தை விளக்குக?*

(2+3+=10 புள்ளிகள்)

5. *பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக?*
   *(1)புனித யோசவாஸ் அடிகள்*
   *(2)தூய உள்ளம் மாசற்ற வாழ்வு*
   *(3) புனித திருமுழுக்கு யோவான்*
   *(4)திருவிவிலியம்*

(2+3+=10 புள்ளிகள்)